FLASH

# SRES-NFIRன் முயற்சிக்கு வெற்றி!

FLASH

## INCENTIVE RATEஐ உயர்த்தி வழங்க Rly.Board உத்தரவு

**NFIR-Rly.Bd., PNM Sub No.12/2017**

Hourly Rate Incentive ஐ 7வது ஊதியக்குழு சம்பள அடிப்படையில் Workshop மற்றும் Production Unit தொழிலாளர்களுக்கும், JE களுக்கும் 2.25 மடங்கு, SSE களுக்கு அடிப்படை சம்பளத்தில் 15% உயர்த்தி வழங்க Rly.Bd.,உத்தரவு.

இவை **01.07.2017** முதல் அமுல்படுத்தப்படும்.

ஆதாரம் Rly.Bd., Lr.RBE No.131/2019 dt.09.08.2019

Incentive கமிட்டியை அமைக்க வைத்து கூட்டங்களில் வாதாடியதோடு மட்டுமல்லாமல் தொடர்ந்து போராடி அரியர்சுடன் வழங்குவதற்கு உத்தரவு பெற்றுத்தந்த

தேசிய தலைவர்

# Dr.M.இராகவைய்யாஜி

PRESIDENT/SRES & GS/NFIR

திரு. **P.S.சூரியபிரகாசம்**
GS/SRES & JGS/NFIR

திரு. **K.கோபிநாத்**
WGS/ICFMS, ZS/IRTSA
கமிட்டி மெம்பர்


மற்றும் **SRES-NFIR நிர்வாகிகளுக்கு மனமார்ந்த நன்றி!**

குறிப்பு: Incentive கமிட்டி நடத்திய 4 கூட்டங்களிலும், 4.4.19, 31.5.19, 24.6.19, 25.6.19, 20.7.19, 11.7.19, 29.7.19 தேதிகளில் கடிதங்கள் வாயிலாகவும், இரயில்வே அமைச்சரிடமும், அவர்களிடமும், CRB அவர்களிடமும், GS/NFIR தொடர் வலியுறுத்தல். புரிந்துகொள்வீர்..

செய்வதை சொல்லும், சொல்வதை செய்யும் உங்கள் சங்கம்

SRES க்கு இரயில் இன்ஜின் சின்னத்தில் வாக்களித்து வெற்றிபெறச் செய்வீர்

100 நாள் நாசகார திட்டத்தை முறியடிக்க SRES வுடன் இணைந்து போராட வாரீர்!...



GOVERNMENT OF INDIA
MINISTRY OF RAILWAYS
(RAILWAY BOARD)

RBE No. 131/2019.
No.: 2018/M(W)/814/59 New Delhi, dated: 09.08.2019.

The GMs/CAO(R)/PCMEs
All Zonal Railways and PUs
(As per standard mailing list)

**Sub.: Revision of hourly rates of incentive bonus and bonus factor of workshops/PUs in respect of staff under CLW pattern/GIS.**

Arising out of implementation of 7th Pay Commission pay structure, revised hourly rates of incentive bonus in CLW pattern incentive scheme and bonus factor in Group Incentive scheme in Workshops/PUs have been approved by Railway Board as given below.

i. A factor of 2.25 is applied for revision of hourly incentive rates for CLW pattern incentive scheme and bonus factor for Group Incentive Scheme for all direct categories and [illegible]

ii. Incentive to the SSEs is linked to the basic pay. The applicable percentage for calculation of incentive for SSEs directly supervising the work of staff working in the shop floor [illegible] of the new basic under 7th CPC i.e. Incentive payable to SSEs [illegible] basic pay x 15%.

iii. The revision of hourly rates of incentive bonus and bonus factor of workshops and [illegible] with [illegible] improvement in productivity. It is to be done by [illegible] in case of workshops/PUs under CLW pattern [illegible] productivity without additional payment in case of workshops/PUs under GIS.

iv. Biometric attendance is made compulsory in all workshops/PUs.

2. The increased hourly rates of incentive bonus and bonus factor of workshops/PUs in respect of staff under CLW pattern/GIS are made applicable from 01st July,2017.

3. Zonal Railways and PUs [illegible] inspection by third party for [illegible] in the overall interest of Indian Railways.

4. Other guidelines, not [illegible] for payment of incentive to staff under CLW/GIS pattern incentive schemes shall continue to be in force.

5. This issues with the concurrence of Finance Directorate of Ministry of Railways.

Please acknowledge receipt.

(A.V.K.M. Rao)
Dy. Dir. Mech. (W)
Railway Board

No.: 2018/M(W)/814/59 New Delhi, dated: 09.08.2019.

1. Copy (with 40 spares) forwarded to the Dy. CAG of India(Railways), Room No. 224, Rail Bhavan, New Delhi
2. Principal Director of Audit, Railways, New Delhi

For Financial Commissioner/Rlys.

No.: 2018/M(W)/814/59 New Delhi, dated: 09.08.2019.

Copy to:

1. GS/NFIR
2. GS/AIRF
3. [illegible] (LR), Railway Board for information

(A.V.K.M. Rao)
Dy. Dir. Mech. (W)
Railway Board

WORKSHOP DIVISION

## சொல்வதை செய்யும், செய்வதை சொல்லும் ஒரே சங்கம் SRES என்பது நிரூபணமானது... SRES - NFIR ன் தொடர் முயற்சிக்கு கிடைத்தது வெற்றி.

280

NFIR-Rly. Bd., PNM Sub No.12/2017

# INCENTIVE RATE ஐ 01.07.2017 முதல் உயர்த்தி அரியர்சுடன் வழங்க Rly. Bd., உத்தரவு

அன்பார்ந்த தொழிலாள சகோதர, சகோதரிகளே!

இந்திய இரயில்வேயில் உள்ள அனைத்து பணிமனைகள் மற்றும் உற்பத்தி பிரிவுகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தியை விட கூடுதலாக உற்பத்தி செய்வதாலும் இதற்கு உறுதுணையாக உள்ள JEகளுக்கும் கொடுக்கப்படுகின்ற ஊக்கத்தொகையான இன்சென்டிவ் ரேட்டை 7வது சம்பள விகிதத்தின் அடிப்படையில் உயர்த்தி வழங்க வேண்டுமென NFIR - Rly. Bd., PNM Sub. No. 12/2017 மூலம் கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தியதால் அமைக்கப்பட்டது தான் இன்சென்டீவ் கமிட்டி என்பதை அனைவரும் அறிவோம்!

இக்கமிட்டியிடம் ஆதாரபூர்வமான தகவல்களையும், புள்ளி விவரங்களையும் கொடுத்த தேசிய தலைவர் Dr. M.இராகவைய்யாஜி அவர்கள் சிறப்பான வாதங்களை முன் வைத்து பல கட்ட கூட்டங்களில் இன்செண்டீவ் விகிதத்தை 2.57 மடங்கு உயர்த்தி தரவேண்டும் என்று வலியுறுத்திய போது 1.8 மடங்குதான் உயர்த்தி தருவதாக சொன்ன கமிட்டியின் கருத்தை ஏற்க மறுத்து தொடர்ந்து வலியுறுத்தி பேச்சுவார்த்தை நடத்தியதன் பயனாக 2.25 மடங்கு அதிகரித்து தருவதற்கும், இன்செண்டீவ் தொகையின் உயர்வை 01.07.2017 முதல் முன் தேதியிட்டு அமுல்படுத்தவும், SSE களுக்கு அடிப்படை சம்பளத்தில் 15% Incentive தொகையாக வழங்கவும் இரயில்வே போர்டிடம் இக்கமிட்டி பரிந்துரை செய்தது. இருப்பினும் இது சம்பந்தமாக SRES- NFIR தொடர்ந்து பல கட்ட போராட்டங்களை நடத்தி இன்செண்டீவ் தொகையை 01.01.2016 முதல் உயர்த்தி வழங்க வேண்டும் என வலியுறுத்தியதை அனைவரும் அறிவீர்கள்.

இன்செண்டீவிற்கான உத்தரவை உடனே வழங்கவேண்டும் என தேசியதலைவரும், SRES ன் தலைவரும், NFIRன் பொதுசெயலாருமான Dr.M.இராகவைய்யாஜி அவர்கள், Chairman/Rly.Bd., க்கு 04.04.19, 31.5.19, 24.6.19, 25.6.19, 20.7.19 தேதிகளில் கடிதங்கள் வாயிலாகவும், மாண்புமிகு இரயில்வே அமைச்சர் **திரு.பியூஸ்கோயல்** அவர்களை 11.07.19 அன்று நேரில் சந்தித்தும், 29.07.2019 அன்று **இரயில்வே போர்டு சேர்மனை** சந்தித்து கமிட்டியின் பரிந்துரைக்கு உடனே ஒப்புதல் அளிக்க வலியுறுத்தியதன் பயனாக Incentiveஐ 01.07.2017 முதல் முன் தேதியிட்டு அமுல்படுத்திட இரயில்வே போர்டு 09.08.2019 அன்று உத்தரவு. ஆதாரம்: RBE No.131/2019 dt. 09.08.2019

இதற்கான முயற்சியினை அன்று முதல் இன்று வரை தொடர்ந்து மேற்கொண்டு வரும் நமது ஒப்பற்ற தலைவர் **Dr.M.இராகவைய்யாஜி President/SRES &GS/NFIR** அவர்களுக்கும், அவர்களுடன் இணைந்து செயலாற்றிய கமிட்டி உறுப்பினர் **திரு.K.கோபிநாத்,** SSE/ICF, WGS/ICFMS/NFIR & ZS/IRTSA/ICF அவர்களுக்கும், **திரு.P.S.சூரியபிரகாசம்,** GS/SRES & JGS/NFIR அவர்களுக்கும் அனைவரின் சார்பாக **நெஞ்சார்ந்த நன்றியினை** தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பு : இன்செண்டீவ்க்கான அரியர்ஸ் தொகையை உடனே வழங்க S.Rly., நிர்வாகத்தை SRES - NFIR வலியுறுத்துகிறது.

**Incentiveக்கு அரியர்ஸ் வரவே வராது .... என சொல்லித்திரிந்த யூனியன்களுக்கு தக்க பாடம் புகட்டுங்கள்... தொழிற்சங்க அங்கீகார ரகசிய தேர்தலில் இரயில் என்ஜின் சின்னத்தில் வாக்களித்து SRESஐ வெற்றி பெறச்செய்யுங்கள்...**

SRES

**மத்திய அரசு கொண்டு வந்த 100 நாள் நாசகார திட்டத்தை தகர்த்தெறிய ஒன்று கூடுங்கள்...**

**100 ஆண்டுகள் தொழிலாளர்களுக்காக SRES.. 12 ஆண்டுகள் தொழிலாளர்களால் SRES...**

## SRES WORKSHOP DIVISION NFIR

**FLASH !** **SRES – NFIR** **FLASH !!**

# INCENTIVE VICTORY FOR NFIR PNM SUB. No. 12/2017

## RBE No. 131 / 2019 OF 09.08.2019

| S.No. | Designation | Present Rate | Revised Rate | Increase (Rs.) |
|---|---|---|---|---|
| 1. | SSE | ---- | 15% of Basic Pay | ---- |
| 2. | JE, Sr.Tech | 49.65 | 111.71 | 62.06 |
| 3. | Supervisor, Tech. Gr.I | 43.30 | 97.43 | 54.13 |
| 4. | Tech.Gr.II | 38.50 | 86.63 | 48.13 |
| 5. | Tech. Gr.III | 32.20 | 72.45 | 40.25 |
| 6. | Semi Skilled | 25.45 | 57.26 | 31.81 |

**Note : 1) Employees will get arrears 01.07.2017 onwards.**
**2) Due to GS/NFIR continuous efforts & written letters dated 06.07.17, 04.04.19,31.05.19, 24.06.19, 25.06.19, 20.07.19, 29.07.19. Now Board Issued order. We are demanding from 01.01.16.**

**Thanks to GS/NFIR for his continuous efforts**

Circular No. 1015
Date : 10.08.2019

P.S.Suriyaprakasam
JGS/NFIR & GS/SRES

For more details visit nfirindia.org & sresindia.org

**মাননীয় GS/ NFIR পূৰ্বে দিয়া প্ৰতিশ্ৰুতি অনুসৰি ৰেলৱে' WS/ PU সমূহত প্ৰচলিত ইনচেনটিভ বোনাচৰ Hourly Rates Factor তলত দিয়া ধৰণে ৰেলৱে' বৰ্ডে বৃদ্ধি কৰিলে।**

**As Promised by GS/ NFIR the Hourly Rates of Bonus Factor in WS/ PUs is raised by Railway Board Vide RBE No : 131/2019; Dtd. 9.8.2019 as below:**

## 1. Incentive Bonus Factor is Raised by 2.25 Times.
## 2. Incentive Payable to SSEs* = New Basic Pay x 15%
## 3. Incentive Arrears is Payable w.e.f. 01.07.2017.

**GOVERNMENT OF INDIA**
**MINISTRY OF RAILWAYS**
**(RAILWAY BOARD)**

RBE No. 131 /2019.
No.: 2018/M(W)/814/59 New Delhi, dated: 09.08.2019.

The GMs/CAO(R)/PCMEs,
All Zonal Railways and PUs,
(As per standard mailing list)

**Sub.: Revision of hourly rates of incentive bonus and bonus factor of workshops/PUs in respect of staff under CLW pattern/GIS.**

Arising out of implementation of 7th Pay Commission pay structure, revised hourly rates of incentive bonus in CLW pattern incentive scheme and bonus factor in Group Incentive scheme in Workshops/PUs have been approved by Railway Board as given below:

i. A factor of 2.25 is applied for revision of hourly incentive rates for CLW pattern incentive scheme and bonus factor for Group Incentive Scheme for all direct categories and JEs/EIWs.

ii. Incentive to the SSEs is linked to the basic pay. The applicable percentage for calculation of incentive for SSEs directly supervising the work of staff working in the shop floor will be 15% of the new [illegible]. Incentive payable to SSEs = New basic pay x 15%.

iii. The revision of hourly rates of incentive bonus and bonus factor of workshops and PUs is linked with 5% improvement in productivity. It is to be done by revision of allowed time in case of workshops/PUs under CLW pattern incentive or 5% increase in productivity without additional payment in case of workshops/PUs under GIS.

iv. Biometric attendance is made compulsory in all workshops/PUs.

2. The increased hourly rates of incentive bonus and bonus factor of workshops/PUs in respect of staff under CLW pattern/GIS are made applicable from 01st July 2017.

---2/-

-2-

3. Zonal Railways and PUs should decide on provision of inspection by third party for improvement in quality of output in the overall interest of Indian Railways.

4. Other guidelines, not covered in this letter, for payment of incentive to staff under CLW/GIS pattern incentive schemes shall continue to be in force.

5. This issues with the concurrence of Finance Directorate of Ministry of Railways.

Please acknowledge receipt.

(A.V.K.M. Rao)
Dy. Dir. Mech. (W)
Railway Board.

No.: 2018/M(W)/814/59 New Delhi, dated: 09.08.2019

1. Copy (with 40 spares) forwarded to the Dy. CAG of India(Railways), Room No. 224, Rail Bhavan, New Delhi.
2. Principal Director of Audit, Railways, New Delhi.

For Financial Commissioner/Rlys.

No.: 2018/M(W)/814/59 New Delhi, dated: 09.08.2019

Copy to:

GS/NFIR.
GS/AIRF.
EDE(N)/EDPC/ EDFC/EDF(E)/F(E)II/E(LR), Railway Board for information

(A.V.K.M. Rao)
Dy. Dir. Mech. (W)
Railway Board.

குறிப்பு : NFIR - Rly. Bd., PNM Sub No.12/2017 மூலம் அமைக்கப்பட்ட இன்சென்டீவ் கமிட்டியிடம் 04.6.18, 04.07.18, 26.9.18 மற்றும் 3.4.19 தேதிகளில் நடைபெற்ற கூட்டு கூட்டங்களில் SRESன் தலைவரும், NFIRன் பொதுச்செயலாளருமான **Dr.M.இராகவைய்யா** அவர்கள் 1999 பார்முலா மற்றும் 19.7.2005ல் நிதி அமைச்சகத்தால் ஏற்றுக்கொண்டதை நடைமுறைப்படுத்தபட வேண்டும் என்றும், 5.2.19 அன்று Rly. Bd., தெரிவித்த கருத்தை கண்டித்தது மட்டுமல்லாமல், அதை அமுல்படுத்தக்கூடாது என்றும், அலவுடுடைமை குறைக்காமலும், CLW Pattern படி Hourly Rates of Incentive Bonus 2.57 மடங்கு உயர்த்தி வழங்க வேண்டும் என 3.3.19 மற்றும் 28.3.19 தேதிகளில் NFIR நடத்திய நாடு தழுவிய போராட்டங்களினாலும், S.Rlyல் SRES தொடர்ந்து நடத்திய பலவித போராட்டங்களின் பயனாகவும் இன்சென்டீவ் ரேட்டை 2.25 மடங்கு உயர்த்தி **01.07.2017** முதல் வழங்க Rly. Bd.,யிடமிருந்து 09.08.2019 அன்று உத்தரவை பெற்றுத்தந்தது SRES- NFIR.

# SRES - NFIR

**அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே ! வணக்கம்.**

7வது ஊதியக்குழு சம்பள அடிப்படையில் இன்சென்டீவ் ரேட்டை உயர்த்தி வழங்க வேண்டும் என SRESன் தலைவரும், NFIRன் பொதுசெயலாளருமான **Dr.M.**இராகவையாஜி அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி பெற்றுத்தந்த 2.25 மடங்கு இன்சென்டீவ் உயர்வினை 01.07.2017 முதல் முன் தேதியிட்டு அமுல்படுத்துவது பற்றியும் கீழ்கண்ட உத்தேசிக்கப்பட்ட புள்ளி விவரங்களை தங்களது மேலான பார்வைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த அரியர்ஸ் தொகையை உடனே வழங்கிட S.Rly., நிர்வாகத்தை SRES-NFIR வலியுறுத்துகிறது.

SRES - WORKSHOP DIVISON - NFIR

| MONTH | HELPER | | | TECH GR - III | | |
|---|---|---|---|---|---|---|
| | NEW AMOUNT | OLD AMOUNT | DIFFERENCE AMOUNT | NEW | OLD | DIFF |
| August 2017 | 5605 | 2503 | 3102 | 7080 | 3166 | 3919 |
| September 2017 | 5719 | 2553 | 3166 | 7224 | 3231 | 3993 |
| October 2017 | 5006 | 2235 | 2771 | 6324 | 2828 | 3496 |
| November 2017 | 5605 | 2503 | 3102 | 7080 | 3166 | 3914 |
| December 2017 | 5847 | 2611 | 3236 | 7386 | 3303 | 4083 |
| January 2018 | 5006 | 2235 | 2791 | 6324 | 2828 | 3496 |
| February 2018 | 5605 | 2503 | 3102 | 7080 | 3166 | 3914 |
| March 2018 | 5363 | 2394 | 2969 | 6774 | 3029 | 3745 |
| Apirl 2018 | 5363 | 2394 | 2969 | 6774 | 3029 | 3745 |
| May 2018 | 4264 | 1904 | 2360 | 5387 | 2409 | 2978 |
| June 2018 | 5847 | 2611 | 3236 | 7386 | 3303 | 4083 |
| July 2018 | 5491 | 2452 | 3039 | 6936 | 3102 | 3834 |
| August 2018 | 5847 | 2611 | 3236 | 7386 | 3303 | 4083 |
| September 2018 | 5491 | 2452 | 3039 | 6936 | 3102 | 3834 |
| October 2018 | 5363 | 2394 | 2969 | 6774 | 3029 | 3745 |
| November 2018 | 5605 | 2503 | 3102 | 7080 | 3366 | 3914 |
| December 2018 | 5734 | 2560 | 3174 | 7242 | 3239 | 4003 |
| January 2019 | 4878 | 2178 | 2700 | 6161 | 2755 | 3406 |
| February 2019 | 5719 | 2553 | 3166 | 7224 | 3231 | 3993 |
| March 2019 | 5363 | 2394 | 2969 | 6774 | 3029 | 3745 |
| Apirl 2019 | 5734 | 2560 | 3174 | 7242 | 3239 | 4003 |
| May 2019 | 3651 | 1630 | 2021 | 4612 | 2063 | 2549 |
| June 2019 | 5847 | 2611 | 3236 | 7386 | 3303 | 4083 |
| July 2019 | 5605 | 2503 | 3102 | 7080 | 3166 | 3914 |

SRES - WORKSHOP DIVISON - NFIR

| MONTH | TECH GR - II | | | TECH GR - I | | |
|---|---|---|---|---|---|---|
| | NEW | OLD | DIFF | NEW | OLD | DIFF |
| August 2017 | 8555 | 3786 | 4769 | 9538 | 4258 | 5280 |
| September 2017 | 8729 | 3863 | 4866 | 9732 | 4344 | 5388 |
| October 2017 | 7641 | 3381 | 4260 | 8519 | 3803 | 4716 |
| November 2017 | 8555 | 3786 | 4769 | 9538 | 4258 | 5280 |
| December 2017 | 8925 | 3950 | 4975 | 9951 | 4442 | 5509 |
| January 2018 | 7641 | 3381 | 4260 | 8519 | 3803 | 4716 |
| February 2018 | 8555 | 3786 | 4769 | 9538 | 4258 | 5280 |
| March 2018 | 8185 | 3622 | 4563 | 9126 | 4074 | 5052 |
| Apirl 2018 | 8185 | 3622 | 4563 | 9126 | 4074 | 5052 |
| May 2018 | 6509 | 2880 | 3629 | 7257 | 3239 | 4018 |
| June 2018 | 8925 | 3950 | 4975 | 9951 | 4442 | 5509 |
| July 2018 | 8381 | 3709 | 4672 | 9344 | 4171 | 5173 |
| August 2018 | 8925 | 3950 | 4975 | 9951 | 4442 | 5509 |
| September 2018 | 8381 | 3709 | 4672 | 9344 | 4171 | 5173 |
| October 2018 | 8185 | 3622 | 4563 | 9126 | 4074 | 5052 |
| November 2018 | 8555 | 3786 | 4769 | 9538 | 4258 | 5280 |
| December 2018 | 8751 | 3873 | 4878 | 9757 | 4355 | 5402 |
| January 2019 | 7445 | 3295 | 4150 | 8301 | 3705 | 4596 |
| February 2019 | 8729 | 3863 | 4866 | 9732 | 4344 | 5388 |
| March 2019 | 8185 | 3622 | 4563 | 9126 | 4074 | 5052 |
| Apirl 2019 | 8751 | 3873 | 4878 | 9757 | 4355 | 5402 |
| May 2019 | 5573 | 2466 | 3107 | 6213 | 2774 | 3439 |
| June 2019 | 8925 | 3950 | 4975 | 9951 | 4442 | 5509 |
| July 2019 | 8555 | 3786 | 4769 | 9538 | 4258 | 5280 |

| MONTH | SR-TECH | | |
| --- | --- | --- | --- |
| | NEW | OLD | DIFF |
| August 2017 | 11013 | 4882 | 6131 |
| September 2017 | 11237 | 4981 | 6256 |
| October 2017 | 9837 | 4361 | 5476 |
| November 2017 | 11013 | 4882 | 6131 |
| December 2017 | 11490 | 5093 | 6397 |
| January 2018 | 9837 | 4361 | 5476 |
| February 2018 | 11013 | 4882 | 6131 |
| March 2018 | 10537 | 4671 | 5866 |
| Apirl 2018 | 10537 | 4671 | 5866 |
| May 2018 | 8379 | 3714 | 4665 |
| June 2018 | 11490 | 5093 | 6397 |
| July 2018 | 10789 | 4783 | 6006 |
| August 2018 | 11490 | 5093 | 6397 |
| September 2018 | 10789 | 4783 | 6006 |
| October 2018 | 10537 | 4671 | 5866 |
| November 2018 | 11013 | 4882 | 6131 |
| December 2018 | 11266 | 4994 | 6272 |
| January 2019 | 9584 | 4249 | 5335 |
| February 2019 | 11237 | 4981 | 6256 |
| March 2019 | 10537 | 4671 | 5866 |
| Apirl 2019 | 11266 | 4994 | 6272 |
| May 2019 | 7174 | 3180 | 3994 |
| June 2019 | 11490 | 5093 | 6397 |
| July 2019 | 11013 | 4882 | 6131 |

| இந்த மாத புதிய இன்சென்டிவ் தொகை | |
| --- | --- |
| T.T 200-680, 49% - 98.333 Hrs | |
| Sr. TECHNICIAN | Rs. 11,013 |
| TECHNICIAN GR I | Rs. 9,538 |
| TECHNICIAN GR II | Rs. 8,555 |
| TECHNICIAN GR III | Rs. 7,080 |
| HELPER | Rs. 5,605 |

| NEW INCENTIVE RATES (From 01.07.2017) | | |
| --- | --- | --- |
| | OLD | NEW |
| SR. TECH | Rs. 49.65 | Rs. 112.00 |
| TECH GR I | Rs. 43.30 | Rs. 97.00 |
| TECH GR II | Rs. 38.50 | Rs. 87.00 |
| TECH GR III | Rs. 32.20 | Rs. 72.00 |
| HELPER | Rs. 25.45 | Rs. 57.00 |

| MONTH | TIME TAKEN | 49% |
| --- | --- | --- |
| August 2017 | 200-680 | 98.333 |
| September 2017 | 204-760 | 100.332 |
| October 2017 | 179-240 | 87.828 |
| November 2017 | 200-680 | 98.333 |
| December 2017 | 209-360 | 102.586 |
| January 2018 | 179-240 | 87.828 |
| February 2018 | 200-680 | 98.333 |
| March 2018 | 192-000 | 94.080 |
| Apirl 2018 | 192-000 | 94.080 |
| May 2018 | 152-680 | 74.813 |
| June 2018 | 209-360 | 102.586 |
| July 2018 | 196-600 | 96.334 |
| August 2018 | 209-360 | 102.586 |
| September 2018 | 196-600 | 96.334 |
| October 2018 | 192-000 | 94.080 |
| November 2018 | 200-680 | 98.333 |
| December 2018 | 205-280 | 100.587 |
| January 2019 | 174-640 | 85.574 |
| February 2019 | 204-760 | 100.332 |
| March 2019 | 192-000 | 94.080 |
| Apirl 2019 | 205-280 | 100.587 |
| May 2019 | 130-720 | 64.050 |
| June 2019 | 209-360 | 102.586 |
| July 2019 | 200-680 | 98.333 |

**SRES / NFIR** பெற்றுத் தந்த் உத்தரவின் அடிப்படையில் 01.07.2017 முதல் முன் தேதியிட்டு இன்சென்டிவ் அரியர்சை விரைவில் பெற்றுதர உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

குறிப்பு : இவை **49%** அடிப்படையில் கணக்கிடப்பட்ட பொதுவான அட்டவணை. ஆகையால் அவரவர் ஒவ்வொரு மாதமும் வேலை செய்த நாட்கள் மற்றும் கூடுதல் உற்பத்திகளை **JC** பர்சன்டேஜ் கணக்கில் கொண்டு ஒவ்வொருவருக்கும் இன்சென்டிவ் அரியர்ஸ் தொகை மாறுபடும்.

| | |
| --- | --- |
| Sr. TECHNICIAN | Rs. 1,41,721 |
| TECHNICIAN GR I | Rs. 1,24,005 |
| TECHNICIAN GR II | Rs. 1,10,235 |
| TECHNICIAN GR III | Rs. 90,472 |
| HELPER | Rs. 71,731 |

SRES - NFIR
WORKSHOP DIVISION

தொழிலாளர்களே உஷார் ! உஷார் !!

பெடரேஷன் என்ன செய்தது என்று கேட்கின்ற கோயபல்ஸ் **DREU** – வே ? உயர்த்தபட்ட இன்சென்டிவ்வை பெறுவதற்காக **NFIR** பெடரேஷன் **Rly. Bd., PNM Sub No:12/2017** மூலம் **Rly. Bd.,**ல் வாதாடி இதற்கென்று கமிட்டி அமைக்க வைத்து இக்கமிட்டியிடம் பல்வேறு கட்ட பேச்சு பேச்சுவார்த்தை நடத்தி இறுதியாக உயர்த்திய இன்சென்டிவிற்கான உத்தரவை **09.08.2019** அன்று **(RBE No:131/2019) Rly. Bd.,**யிடமிருந்து பெற்றுக்கொடுத்தது **SRES-NFIR** என்பதை அறிவீர்கள்.

எப்போதும் போல் வாயால் வடை சுடும் மஸ்தூர் & கோ நாங்கள் தான் அங்கீகரிக்கப்பட்ட சங்கம். எங்களால் தான் அனைத்தும் நடந்தேறியதாகவும், நாங்கள் தான் இன்சென்டிவ் தொகையை உயர்த்தி தந்துள்ளோம் என்று வழக்கம்போல் ப்ளக்ஸ், போஸ்டர், ஆடியோ, வீடியோவுடன் உங்களை நாடி கையூட்டு பெற வருவார்கள்... தக்க பாடம் புகட்டுவீர்........!

## SRMU, DREU க்கு போட நினைக்கிற ஓட்டு நமக்கு நாமே வைத்துக்கொள்ளும் வேட்டு........

**புறக்கணிப்பீர் ! புறக்கணிப்பீர் !! புதுயுகம் படைப்பீர்.**



சொல்வதை செய்யும் ! செய்வதை சொல்லும் !!

**உங்கள் சங்கம் SRES-க்கு**
**இரயில் என்ஜின் சின்னத்தில் வாக்களித்து**
**வெற்றி பெறச்செய்வீர் ! !**

# SRES WORKSHOP DIVISION NFIR

# SRES-NFIR

## கப்பம் கட்டினால் தான் OT அலவன்ஸா?

## CWM அவர்களே தலையிடுங்கள்!

## EBR ஷாப்பிற்கு விடியலை தாருங்கள்.

நமது பொன்மலை பணிமனையில் பல்வேறு முக்கிய வேலைகளை துல்லியமாக செய்து பணிமனைக்கு பெயரும் , புகழையும் பெற்றுத்தருகின்ற தொழிலாளர்களின் பிரச்சனைகளை நிர்வாகம் கண்டும் காணாமல், அவர்களுக்கு இருக்கின்ற சலுகைகளையும், உரிமைகளையும் பறித்து தவிக்கவிடும் போக்கை SRES-NFIR வன்மையாக கண்டிக்கிறது.

குறிப்பாக பொன்மலை பணிமனையில் உள்ள EBR ஷாப்பில் பணியாற்றும் தொழிலாளர்களை வஞ்சிப்பதோடு சிறப்பாக இருந்த ஷாப்பை மாற்றியது யாருக்காக? கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை 120 தொழிலாளர்கள் இருந்த இந்த ஷாப்பில் இன்ஜின் பிளாக் ரிக்லமேஷன் வேலையை சிறப்பாக செய்து ஆண்டுக்கு 135 வரை அவுட்டர்னாக கொடுத்திருந்த இந்த ஷாப்பில் தற்போது தொழிலாளர்கள் எண்ணிக்கையை படிப்படியாக குறைத்தது எதற்காக? தற்போது 60 தொழிலாளர்கள் மட்டும் வேலை செய்யும் இந்த EBR ஷாப்பில் 2018-ஆம் ஆண்டு கூட 67 இஞ்சின் பிளாக் ரிக்லமேஷன் செய்து அவுட்டர்னாக கொடுத்துள்ளார்கள்.

இது போன்ற சூழ்நிலையில் 40 கோடி மதிப்பிலான TOS மெஷினை நிறுவி இருந்தாலும் சரியான முறையில் அந்த மெஷின் வேலை செய்ய முடியாததால் , அந்த மிஷினில் ஏற்பட்ட பழுதினை சீர் செய்வதற்கு வெளியில் இருந்து ஆட்கள் வருவதும், போவதுமாகத்தான் இருக்கிறதே தவிர விலை உயர்ந்த மிஷினில் ஏற்பட்ட குறைபாடு இதுநாள் வரை களையப்படவில்லை.

இருப்பினும் தொழிலாளர்கள் எண்ணிக்கை குறைந்த போதும் உற்பத்தியை சீராக கொடுத்து வரும் உழைக்கும் தொழிலாளர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த OTஅலவன்சை நிறுத்தியதற்கு காரணம் யார்? இந்த ஷாப்பில் கூடுதல் வேலை செய்து பணிமனையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு பேருதவியாக இருக்கும் EBR ஷாப் தொழிலாளர்களுக்கு OT அலவன்ஸ் வழங்குவதில் நிர்வாகத்திற்கு பிரச்சனை என்ன?

NFIR எடுத்த தொடர் முயற்சியால் OT அலவன்ஸை 7வது ஊதியக்குழு சம்பள அடிப்படையில் உயர்த்தி வழங்க வேண்டும் என வலியுறுத்தியபோது 01.07.2017 முதல் உயர்த்தி வழங்க கொடுத்த Rly.Bd, உத்தரவை மீண்டும் மாற்றி 01.01.2016 முதல் உயர்த்தப்பட்ட சம்பளத்திற்கு ஏற்றபடி OT அலவன்ஸை அரியர்ஸோடு பெற்றுத்ததந்தது SRES- NFIR என்பதை அனைவரும் அறிவீர்கள். இதனால் EBR ஷாப்பில் இருந்த அனைத்து தொழிலாளர்களும் பயனடைந்துள்ளனர்.

ஆனால், உழைக்கின்ற தொழிலாளர்கள் எந்த நிலையில் இருந்தாலும் எனக்கு கப்பம் கட்டவில்லையென்றால் உங்களுக்கு OT கொடுப்பது நிறுத்தப்படும். மேலும் இடமாறுதல் உத்தரவு தான் வரும் என்று சொல்லி வலம் வரும் இந்த தொழிலாள விரோதியை பணிமனைக்குள் எப்படி நிர்வாகம் அனுமதிக்கிறது.

## CWM/GOC அவர்களே!

EBR ஷாப்பில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நியாயமான முறையில் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய OT அலவன்ஸை வழங்குவதற்கு உத்தரவிடுங்கள். இல்லையென்றால் ஒட்டுமொத்தமாக டீசல் ஷாப்பிற்கு இடமாறுதல் செய்யுங்கள் என தொழிலாளர்களின் கோரிக்கையை உடனே நிறைவேற்றுங்கள்

GOC பணிமனை நுழைவாயிலில் தனது காரை அனுமதிக்காவிடில் பாதுகாப்பு பணியில் உள்ள RPF வீரர்களை வாயில் சொல்ல முடியாத , ஏட்டில் எழுத முடியாத, வார்த்தைகளால் வசைபாடுவதும், தனக்கு சரியான முறையில் கப்பம் கட்டும் ஷாப்புகளை சார்ந்தவர்களுக்கு OT அலவன்ஸ் குறைந்தால் அதிகாரிகளை மிரட்டுவதும் வாடிக்கையாக வைத்து பொன்மலை பணிமனைக்குள்ளே **வலம் வரும் ஆக்டிங் மாமா மீது உரிய நடவடிக்கை எடுத்திட** SRES/NFIR நிர்வாகத்தை வலியுறுத்துகிறது.

தொழிற்சங்க அங்கீகார ரகசிய தேர்தல் (Secret Ballot Election) காலதாமதம் ஆகும் என்று கூறி தேர்தல் தேதியை தள்ளி வைப்பதற்கான உத்தரவை 01.08.2019 அன்று இரயில்வே போர்டு வெளியிட்டாலும் தற்போது அங்கீகார தேர்தலுக்கான இறுதி வரைமுறைகளை 16.08.2019 அன்று ரயில்வே போர்டு வெளியிட்டுள்ளது.

உத்தரவு வெளியிட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அங்கீகார தேர்தலை நடத்த வேண்டும் என்பது விதிமுறை. ஆகவே அங்கீகார தேர்தல் தேதிக்கான அறிவிப்பு இன்னும் 2 அல்லது 3 நாட்களில் வெளிவரும். இதன்படி தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் சமதள போட்டிக்கான வாய்ப்பை நிர்வாகம் உறுதிப்படுத்திட வேண்டும். 61 பக்கங்கள் கொண்ட தேர்தல் இறுதி வரைமுறைகளை உத்தரவாக ரயில்வே போர்டு வெளியிட்டதை தொடர்ந்து நிர்வாகம் இனி அங்கீகார யூனியன் என்று சொல்லி கூட்டம் நடத்துவது போன்ற அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளது. நேர்மையான, நியாயமான தேர்தல் நடத்த தென்னக இரயில்வே நிர்வாகத்தினை SRES-NFIR வலியுறுத்துகிறது.

**அன்பார்ந்த தொழிலாள சகோதர, சகோதரிகளே! உங்களின் மேலான கனிவான பார்வைக்கு.**

**அன்று...தொழிலாளர்களுக்காக SRES... இன்று... தொழிலாளர்களால் SRES ....**

**உங்கள் நலனில் அக்கறை கொண்டு தொடர்ந்து சேவையாற்றி வரும் உங்கள் சங்கம்**

# SRESக்கு இரயில் எஞ்சின் சின்னத்தில்

**வாக்களித்து வெற்றி பெறச் செய்யுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.**

**55 வயது நிரம்பிய (அ) 30 வருட சர்வீஸ் முடித்த தொழிலாளர்களுக்கு கட்டாய ஓய்வு கொடுக்கும் 100 நாள் நாசகார திட்டத்தை முறியடிக்க போராடும் SRES ஐ வெற்றி பெறச் செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

**SRES வெற்றி! தொழிலாளர்களுக்கு கிடைக்கும் வெற்றி!!**


**EBR ஷாப்பில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு OT அலவன்ஸை உடனே வழங்கி பிரச்சனைகளை தீர்த்திட CWM அவர்களே தலையிடுங்கள்..**

## நிர்வாகமே போராட்டத்தை தூண்டாதே!

## தொழில் அமைதியை கெடுக்காதே!!

**SRES- NFIR தலைமையில் ஒன்று கூடுங்கள்....**

**அங்கீகார தேர்தலிலே சதிகார கும்பலை விரட்டுங்கள்......**



சொல்வதை செய்யும், செய்வதை சொல்லும் உங்கள் சங்கம்

**SRESன் இரயில் என்ஜின் சின்னத்தில்**

***வாக்களித்து வெற்றி பெறச் செய்வீர்!***

**என்றும் தொழிலாளர்கள் பணியில்**

# SRES-NFIR

**அனைத்து கிளைகள், பணிமனைகோட்டம் -பொன்மலை**

# SRES - NFIR

## இரயில்வேயை தனியாருக்கு தாரைவார்க்கும் மத்திய மோடி அரசின் 100 நாள் நாசகார திட்டத்தை கைவிட வலியுறுத்தி

# மாபெரும் தர்ணா

**நாள் : 12.07.2019 நேரம் : காலை 9 மணி முதல் பகல் 2 மணி வரை**

**இடம் : பெரம்பூர் கேரேஜ் CWM அலுவலகம் எதிரில்**

அன்பார்ந்த தொழிலாள சகோதர சகோதரிகளே!

உலகத்திலே தலைசிறந்த இரயில்வேக்களில் 2ஆம் இடத்தில் உள்ள இந்திய இரயில்வே தற்போது 17 ஜோனல்களாகவும், 7 உற்பத்தி பிரிவுகளாகவும், ஒர்க்ஷாப், ஓபன் லைன், பராமரிப்பு, இரயில்வே மருத்துவமனைகள், இரயில்வே பள்ளிகள், இரயில்வே பாதுகாப்பு படை (RPF) என பல பிரிவுகளாக கடந்த 160 ஆண்டுகளுக்கு மேலாக விரிந்து பரந்து ஒட்டு மொத்த இந்திய மக்களுக்கு சிறப்பான, பாதுகாப்பான போக்குவரத்து சேவையை செய்து வரும் இரயில்வே துறையை ஒட்டுமொத்தமாக தனியாருக்கு தாரைவார்க்கும் மத்திய அரசின் 100 நாள் செயல்திட்டம் என்ற நாசகார திட்டத்தை புகுத்தி இரயில்வேயை சீரழிப்பதை SRES - NFIR வன்மையாக கண்டிக்கிறது.

2014 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த மத்திய மோடி அரசு இரயில்வே பட்ஜெட்டை பொது பட்ஜெட்டில் இணைத்து இரயில்வே துறையை அழிப்பதற்கான ஆரம்பகட்ட பணியை துவக்கியது. அன்று முதல் தொடர்ந்து இதனை SRES - NFIR எதிர்த்து வருவதை அனைவரும் அறிவீர்கள்.

இந்திய இரயில்வே முழுவதும் பல போராட்டங்களை தொடர்ந்து நடத்தி 1வது ஊதியக்குழு முதல் 7வது ஊதியக்குழு வரை எழுத்துப்பூர்வமான புள்ளி விவரங்களை கொடுத்து பேச்சு வார்த்தை நடத்தி பல சலுகைகளை இரயில்வே தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுத்து வருவது SRES-NFIR ஆகும். அதில் ஏற்பட்டுள்ள பல குறைபாடுகளை SRES-NFIR மூலம் Rly. Bd., PNM, DC-JCM, NC-JCM, நேஷனல் அனாமலி கமிட்டி, டிபார்ட்மெண்ட் அனாமலி கமிட்டி, CRC கமிட்டி, MACPSகமிட்டி, டிராக்மேன் கூட்டு கமிட்டி, சபைவாலா கமிட்டி, அன்சாரி கமிட்டி GM's கான்பிரன்ஸ், இன்சென்டீவ் கமிட்டி என பல கூட்டங்கள் மூலமாக பேச்சுவார்த்தை நடத்தி உத்தரவுகளை பெற்றுத்தந்தாலும் தென்னக இரயில்வேயில் சரியான முறையில் அமுல்படுத்துவதில்லை என்பதை அனைவரும் அறிவார்கள்.

குறிப்பாக 7வது ஊதியக்குழு சம்பளத்தின் அடிப்படையில் OT அலவன்ஸை வழங்க வலியுறுத்திய போது 01.07.2017 முதல் அமுல்படுத்த இரயில்வே போர்டு 28–11–2017 அன்று உத்தரவு பிறப்பித்தது. OT அலவன்ஸ் என்பது சம்பளத்தின் ஒரு பகுதி என NFIR - DC.JCM Item No.24/2010 மூலம் பெறப்பட்ட உத்தரவுப்படி 01.01.2016 முதல் முன்தேதியிட்டு அமுல்படுத்த இரயில்வே போர்டிடமிருந்து 20.3.2018 அன்று உத்தரவை பெற்று அரியர்சுடன் வழங்க வைத்தது SRES-NFIR என்பதை அனைவரும் அறிவார்கள்.

அதே போன்று பணிமனை தொழிலாளர்களுக்கு 7வது ஊதியக்குழு சம்பள அடிப்படையில் INCENTIVE RATEஐ 2.57 மடங்கு உயர்த்தி வழங்க வேண்டும் என SRES-NFIR மூலமாக Rly. Bd.,PNM Item No. 12/2017 தொடர்ந்து வலியுறுத்தியதால் அமைக்கப்பட்ட இன்சென்டீவ் கமிட்டியிடம் 4 முறை நடந்த கூட்டங்களில் பேச்சுவார்த்தை நடத்தியதோடு மட்டுமல்லாமல், 5% அலவுடு டைமை குறைப்பதாக சொன்ன கமிட்டியிடம் அதனை தடுப்பதற்காக பல போராட்டங்களை நடத்தி 1.8 மடங்கு உயர்த்துவதாக சொன்ன இன்சென்டீவ் ரேட்டை 2.25 மடங்கு உயர்த்திடவும், இதனை முன்தேதியிட்டு 01.01.2016 முதல் அரியர்சுடன் வழங்க SRES-NFIR நடவடிக்கை எடுத்து வருவதை தொழிலாளர்கள் அறிவார்கள்.

ஆனால் உண்மை இவ்வாறிருக்க கோரிக்கைகளை பற்றி துளியும் தெரிந்து கொள்ளாமல், அறிந்து கொள்ளாமல் SRES-NFIR உத்தரவுகளை பெற்று தந்த பிறகு சிலர் இதனை நாங்கள் தான் பெற்றுத்தந்தோம் என போஸ்டர் போட்டு, வசனங்கள் பேசி தொழிலாளர்களை ஏமாற்றி வருவதும், அங்கீகார மமதையில் தொழிலாளர்களையும், சூப்பர்வைஸர்களையும் மிரட்டி பணியவைப்பதும் தொடர் கதையாக உள்ளது.

பணிமனையில் தொழிலாளர்கள் எண்ணிக்கை குறைந்து கொண்டே இருந்தாலும், உற்பத்தியை மட்டும் பல மடங்கு உயர்த்துகின்ற நிர்வாகத்திடம் பேசி தொழிலாளர்களின் குமுறல்களை போக்க நடவடிக்கை எடுக்காமல் தேவையான அடிப்படை, பாதுகாப்பு வசதிகளை செய்து தருவதற்கு அக்கறை காட்டாமல் உழைக்கின்றவர்களுக்கு கிடைக்கக்கூடிய பலன்களை அங்கீகாரத்தை சார்ந்தவர்கள் பெற்றுக்கொண்டு தொழிலாளர்களுக்கே துரோகம் செய்து வருவது வெட்கக்கேடானது.

2013 முதல் 2019 வரை கடந்த ஐந்து ஆண்டுகளாக நடைபெற்றுவரும் பல்வேறு குளறுபடிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு வசதியாக தொழிற்சங்கத்திற்கான அங்கீகார தேர்தலை வருகின்ற ஆகஸ்ட் மாதம் 28 மற்றும் 29 தேதிகளில் நடத்துவதற்கு Modalities ஐ கடந்த 04.07.2019 அன்று இரயில்வே போர்டு உத்தரவாக வெளியிட்டுள்ளது. (ஆதாரம் : Rly. Bd., Lr. No.2019.E(LR)III/SBE/1 dt. 04.07.2019) இனிமேல் நாங்கள் தான் ஒரே அங்கீகாரம் என SRMU சொல்லுகின்ற செயலை நிர்வாகம் கேட்டு செயல்படுவதை உடனடியாக நிறுத்திக் கொள்ளவேண்டும் என S.Rly., நிர்வாகத்தை SRES - NFIR வலியுறுத்துகிறது.

விலைவாசி பட்டியலின் சராசரி சந்தை மதிப்பீட்டை பார்க்கும் போது குறைந்தபட்ச மாத சம்பளம் ரூ.26000/– 01.01.2014லிருந்து வழங்கவேண்டும் என வலியுறுத்தினால் ரூ.18000/– சம்பளம் நிர்ணயம் செய்து 01.01.2016ல் அமுல்படுத்த பரிந்துரை செய்துள்ளது. 7வது ஊதியக்குழு சமர்ப்பித்த இந்த பரிந்துரையில் பக்கம் எண். 63, பாரா எண்.4.2.9 ல் 2வது ஊதியக்குழு 14.2 சதமும், 3 வது ஊதியக்குழு 20.6 சதமும், 4 வது ஊதியக்குழு 27.6 சதமும், 5வது ஊதியக்குழு 31 சதமும் மற்றும் 6 வது ஊதியக்குழு 54 சதமும் உயர்த்தியுள்ளதாக தெரிவித்துள்ள 7 வது ஊதியக்குழு, தற்போது 7வது ஊதியக்குழுவின் மூலம் 14.28 சதம் மட்டுமே சம்பளத்தை உயர்த்தியது. ஒரு குரூப் 'D' தொழிலாளி தற்போது பெறுகின்ற சம்பளத்தை விட கூடுதலாக பெறப்போவது ரூ.555/– மட்டும் தான் சம்பள உயர்வு என புள்ளி விவரங்களோடு தெரிவித்து மத்திய அரசிடம் SRES-NFIR போராடியதால் தான் சிலவற்றை மாற்றியது.

இரயில்வே தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்கத்தான் 2016 ஜுலை 11 முதல் நாடு தழுவிய தொடர் வேலை நிறுத்தம் செய்வதற்கு மத்திய அரசின் அனைத்து தொழிற்சங்கங்களும் தயாரான போது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதாக நாடகமாடி வேலை நிறுத்தத்தை ஜுலை 01 ஆம் தேதியே வாபஸ் செய்து தொழிலாளர்களுக்கு அநீதி இழைத்த அங்கீகார தொழிற்சங்கமான SRMUக்கு தக்கபாடம் புகட்டுவீர்.., போனஸ் அரியர்ஸ் ரூ.2301/– வரவே வராது, LARSGESS திட்டத்தின் மூலம் என்ன பயன், MACPS திட்டத்தினால் பயன் ஏதுமில்லை என்று போஸ்டரிலும், புத்தகத்திலும் வெளியிட்ட பிறகு தற்போது நாங்கள் தான் செய்தோம் என்ற சொல்லும் DREU செயலை யாரும் மறக்க முடியாது. அறிந்தும் அறியாதது போல், தெரிந்தும் தெரியாதது போல் பொய்யை திரும்ப திரும்ப சொல்லி தொழிலாளர்களை ஏமாற்றி பிழைப்பு நடத்தும் பெடரேஷன் இல்லாத DREUக்கு தக்க பாடம் புகட்டுவீர்.., ஏனென்றால் கடந்த 2016 ஜீன் மாதத்திலிருந்து ஜீலை 6 ஆம் தேதி வரை SRES உடன் இணைந்து வேலைநிறுத்த போராட்டத்திற்கான ஆய்த்த பணிகளிலும், விளக்க கூட்டங்களிலும், போராட்டங்களிலும் கூட்டு சேர்ந்து செயல்பட்ட DREU 3 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது வேலை நிறுத்த போராட்டத்திலிருந்து SRES விலகியதாக கோயபல்ஸ் பொய்யை சொல்லி முழு பூசணிக்காயை சோற்றில் மறைத்து தொழிலாளர்களை ஏமாற்ற நினைப்பது வேதனை அளிக்கிறது.

லாபமாக செயல்பட்டு வந்த இரயில்வே துறையின் பட்ஜெட்டை 5 ஆண்டுகளுக்கு முன்பாக பொது பட்ஜெட்டில் இணைத்தவர்கள். தற்போது மீண்டும் மத்தியிலே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாள் முதல் ஒட்டு மொத்த இரயில்வே துறையை தனியாருக்கு தாரை வார்க்க மோடி அரசு அறிவித்த 100 நாள் செயல் திட்டமான நாசகார திட்டத்தை உடனே திரும்ப பெற SRES - NFIR போராடி வருகிறது. குறிப்பாக இரயில் போக்குவரத்து, இரயில் நிலையங்கள் பராமரிப்பு, ரேபரேலியில் உள்ள MCF காார்ப்பரேட்டுக்கும், ICF, RCF, CLW, DLW, DMW, WAP, போன்ற 6 உற்பத்தி பிரிவுகளை IRRSC கம்பெனியாகவும், இரயில்வேயில் மீதமுள்ள இராயபுரம் உள்ளிட்ட 5 பிரிண்டிங் பிரஸ்கள் 31.3.2020க்குள் மூடுவதற்கும், இரயில்வே மருத்துவமனைகள், பள்ளிகள், ஒர்க்ஷாப், ஒபன்லைன் உள்ளிட்ட அனைத்து பிரிவுகளை தனியாருக்கு தாரைவார்ப்பதையும் 55 வயது நிரம்பிய (அல்லது) 30 வருட சர்வீஸ் முடித்த தொழிலாளர்களுக்கு கட்டாய ஒய்வு கொடுப்பதையும் 18.6.2019 அன்று வெளியிட்ட இரயில்வே போர்டு உத்தரவை திரும்ப பெற வலியுறுத்தியும், இரயில்வே தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை காத்திடவும், பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், விலைவாசி உயர்வுக்கு வழிவகுப்பதை தடுத்திடவும் , SRES-NFIR ஜீன் 26 அன்று சதர்ன் இரயில்வே முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்களையும், ஜீலை 2 மற்றும் 3 தேதிகளில் ஆங்காங்கே உண்ணாவிரத போராட்டங்களையும் நடத்தியதோடு மட்டுமல்லாமல் ஜீலை 10 முதல் 13 வரை NFIR சார்பாக நடைபெற்று வரும் நாடு தழுவிய தொடர் போராட்டத்தின் ஒரு பகுதியாக ஜீலை 12 ல் நடைபெறும் இந்த மாபெரும் தர்ணாவில் அனைவரும் இணைந்து செயல்படுவோம்! வெற்றி கிட்டும் வரை போராடுவோம்!

**உண்மைகளை சொல்லி தொடர்ந்து நன்மைகளை செய்து வரும்**
**SRESக்கு வருகின்ற தொழிற்சங்க அங்கீகார தேர்தலில் வாக்களித்து வெற்றி பெறச் செய்வீர்.**

**SRES** **WORKSHOP DIVISION** **NFIR**
**PERAMBUR**